முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 03 திகதி முதல்
சுபகிருது வருடம் மார்கழி மாதம் 10 திகதி வரை
(18.12.2022 ஞாயிறு முதல் 25.12.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. பிரணவ சக்தியான கந்தவேலே
   பிரணவ குடில்படைத்த ஞானவேலே
   சரவணச் சுடரேற்றி அருளுகின்ற
   சற்குருவாய் கலியில் வந்த வடிவேலே
2. வேலனே உமை போற்றி இனிதே
   விளம்பிடுவேன் இந்தியா தமிழகத்தில்
   கோலமதாய் சுபகிருது சிலை திங்களில்
   குறைவிலா சூல திகதி மேல் தசதிகதி வரை
3. வரை நடக்கும் வருங்கால பலனாக
   வார ஆசிதனை அகத்திய மகரிஷியும்
   அரங்கமகான் கேட்க உரைப்பேன்
   அறிவிப்பேன் ஆளுமை சக்திகள்
4. சக்திகள் தயவினை சேவையாக்கி
   சகலருக்கும் சமஉரிமை காணும்படி
   சக்தியோடு ஆளுமை நடத்திட
   சாமானியர்க்கும் இலகுவாய் வாய்ப்பு
5. வாய்ப்பு வளர்ச்சிநிலையாகக் கிட்டி
   வருவாய் பெருக்கம் மாற்றம்
   அய்யமற தேற்றமாகக் கூடிடும்
   ஆளுமையின் கீழான அதிகாரிகள்
6. அதிகாரிகள் அனைத்துத் துறைகளிலும்
   அவசியம் உண்மைபட சேவை
   விதிமீறா ஆற்றிட தேசவளர்ச்சி
   வேகமாக நல்வழியில் தேறி
7. தேறியே மக்களின் தேவைகள்
   தனிநபர் வரவென அனைத்தும்
   மாறியே முன்னேற்றம் காணும்
   மக்களை நேசிக்கும் ஆளுமையாக
8. ஆகவே இந்தியா தமிழகம் செயல்பட
   அகிலம் வியக்க பெருமாற்றம்
   மிகைபட கண்டு ஆளுமை
   மகான்கள் ஆசிபெற்ற வண்ணம்

9. வண்ணமுடன் ஆளுமை சிறந்து
வளமும் நல்ல பாதுகாப்பும்
மண்ணுலகுக்கே முன் மாதிரியாக
மனிதநேயம் நிறைந்த ஆளுமையாக

10. ஆகவே சிறந்து விளங்கும்
ஆற்றல் மிக்க இந்தமாற்றம் காண
மகான் அரங்கன் வழி ஆளுமைகள்
மனமுவந்து சரணாகதி கொண்டு வர நலம்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் மார்கழி மாதம் **03** ம் நாள் **18.12.2022** ஞாயிற்றுக்கிழமை முதல் மார்கழி மாதம் **10** ம் நாள் **25.12.2022** ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள் :

ஓங்காரத்தின் உட்பொருளாய் நின்று ஓங்காரத்தின் ஆதார சக்தியாக விளங்கி நிற்கும் கந்த வேலனே ஓங்கார சக்தியினாலே ஓங்காரக் குடிலினை படைத்து அதை ஞான சபையாக ஆக்கி அச்சபையினிலே சரவண ஜோதி சுடரேற்றி அதன் மூலமாக உலகமெலாம் உள்ள மக்களுக்கு அருள் செய்து அவர்களுக்கு உண்மை ஞான குருவாகவும் இருந்து உலகினை வழி நடத்தி காக்கின்ற ஞானகுருவே கலியுகத்தை மீட்க வந்த மகாஞானியே ஆறுமுக அரங்க மகா தேசிகனே அற்புதமான உம்மை போற்றியே இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் மார்கழி மாதம் **03** ம் நாள் **18.12.2022** ஞாயிற்றுக்கிழமை முதல் மார்கழி மாதம் **10** ம் நாள் **25.12.2022** ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை அரங்க மகான் கேட்க அகத்திய மகரிஷி யானும் வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

ஆட்சி பொறுப்பில் உள்ளவர்களும் அரசை நடத்துபவர்களும் கருணையோடு சேவை மனப்பான்மையுடன் நடந்து வருவதுடன் பாரபட்சம் இன்றி அனைவருக்கும் சமஉரிமை தந்து நடத்திட சாமானிய மக்களுக்கும் அரசின் சகல செயல்பாடுகளிலும் எளிதாக வாய்ப்புகள் கிடைத்து அதன் பயனாய் மக்கள் வளர்ச்சியடைய நாட்டின் வருவாயும் பெருகும் ஆட்சியில் உள்ள அரசு அதிகாரிகள் எல்லா துறைகளிலும் உறுதியுடன் உண்மைபட நடந்து சேவையாற்றி வருவதுடன் விதிமுறைகள் மீறாமல் மக்கள் நலனை கருத்தில் கொண்டு நடந்திட தேசம் வேகமாக வளர்ச்சி அடையும் மக்களின் தேவைகள் அனைத்தும் தாமே பூர்த்தியாகும் தனிநபர் வருமானம் பெருகிடும் நாடும் வளர்ச்சி அடையும். நாட்டினில் நடக்கும் ஆட்சியும் மக்களுக்கான மக்களை நேசிக்கும் ஆட்சியாக நடந்திடும்.

இவ்விதமே இந்தியா தமிழகமும் செயல்பட உலகமே வியக்குமாறு நாட்டினில் பெரும் மாற்றம் உண்டாகும். மகான்களின் ஆசியையும் பெற்று சிறப்பான ஆட்சியாக விளங்கி எல்லா வளமும் எல்லா நலமும் பெற்று பாதுகாப்பு மிக்க ஆட்சியாக மாறி இந்த உலகிற்கே முன்மாதிரியான நாடாக மனிதநேயம் மிக்க ஆட்சியாக சிறந்து விளங்கும்.

ஆற்றல் மிகுந்த இந்த அற்புதமான மாற்றத்தினை நாடு அடைந்திட வேண்டுமாயின் தர்மத்தின் பாதை சொல்லி அறத்தின் வழி தயவுடன் நடத்தி செல்லும் உண்மை ஞான குரு முருகப்பெருமானின் ஆற்றலாக உதித்த அரங்க மகான் கூறும் சுத்த சன்மார்க்க நெறியில் நடந்து அரங்கனை, முருகப்பெருமானை சரணடைய எல்லாம் வெற்றியாக முடியுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–